# 6

# உஸூலுல் பிக்ஹ் (மஸாதிருஷ் ஷரீஆ)

## 6.1 சட்ட மூலாதாரம் - அல்குர்ஆன்

அல் - குர்ஆன் அல்லாஹ்வின் கலாமாகும். இதை அவன் இறுதித்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறுதி வேதமாக அருளினான். அல்-குர்ஆன் என்றால் ஓதப்படக்கூடியது என்று பொருள்படும். அல்லாஹ்வின் வார்த்தைகளாகிய அதனை வெறுமனே ஓதுவதற்கும் நன்மையுண்டு. அதனுடைய சிறிய அத்தியாயம் போன்ற ஒன்றையாவது இயற்ற இன்று வரைக்கும் எவராலும் முடியவில்லை என்பது அதன் மேன்மைக்கும், தெய்வீகத் தன்மைக்கும் எடுத்துக் காட்டாகும். இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களில் முதன்மையானதாக இது விளங்குகின்றது.

அல்குர்ஆன் முதன் முதலாக ஹிரா குகையில் வைத்து நபியவர்களுக்கு அருளப்பட்டது. ரமழான் மாதத்தில் புனிதமிக்க லைலதுல் கத்ர் இரவில் முதன் முதலாக அல்குர்ஆன் அருளப்பட்டது. இதிலிருந்து இருபத்து மூன்று வருட காலங்களாக சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக சிறிது சிறிதாக அருளப்பட்டது. ஸஹாபாக்கள் அதனை மனனஞ் செய்தும், நடைமுறைப்படுத்தியும், எழுதி வைத்தும் பாதுகாத்து வந்தார்கள். கலீபா அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆட்சிக்காலத்தில் அது நூலுருவில் தொகுக்கப்பட்டது. பின்னர் கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் பல பிரதிகளாக எழுதப்பட்டு பல நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அல்குர்ஆன் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள படைப்புக்களையும் உருவாக்கிய அல்லாஹ்வினால் அருளப்பட்டதாகும். அவன் மனிதனைப் படைத்தவன். மனித பலவீனங்களையும் இயல்புகளையும் அறிந்தவன், எல்லாக்காலங்களையும் நன்கு அறிந்தவன், எவ்விதக் குறைபாடும் இல்லாதவன். அத்தகையவனால் வகுத்துத் தரப்படுகின்ற சட்டங்கள் குறைபாடற்றனவாக எல்லா மக்களாலும் பின்பற்றத் தக்கனவாக அமையுமென்பதில் சந்தேகமில்லை.

அல்குர்ஆன் எல்லாக் காலத்துக்கும், எல்லாப் பிரதேசங்களுக்கும், எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான போதனைகளை வழங்குகின்றது. இதனால் அல்குர்ஆன் தரும் சட்டங்களும் நியதிகளும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலம் முதல் உலகம் அழியும் வரை பின்பற்றத்தக்கனவாக இருக்கும்.

மேலும் அல்-குர்ஆனைப் பாதுகாப்பதாக அல்லாஹ் உத்தரவாதமளித்துள்ளான். அதற்கிணங்க அது இன்றுவரை எந்தத் திரிபுக்கும், மாற்றத்துக்கும் உட்படாமல் இருந்து வருகின்றது. இதுவும் அல்-குர்ஆனை சட்டமூலாதாரமாகக் கொள்வதற்குக் காரணமாக உள்ளது.

அல்-குர்ஆனை சட்டமூலாதாரமாகக் கொள்ள வேண்டும். என்பதற்கு ஆதாரமாக அல்-குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

*''மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. உங்கள் இதயங்களிலுள்ள நோய்களுக்கு அது சஞ்சீவி ஆகும். மேலும் அது விசுவாசம் கொண்டவர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது.'' (10:57)*

''எவர்கள் அல்லாஹ் அருளிய பிரகாரம் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக அக்கிரமக்காரர்கள்.'' (5:45)

*''எவர்கள் அல்லாஹ் அருளியவற்றைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக காபிர்களாவர்.'' (5:44)*

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ''நான் உங்களிடம் இரு விடயங்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் பின்பற்றியொழுகும் காலமெல்லாம் நீங்கள் வழி தவறிவிடமாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் வேதமும், எனது வழிமுறையுமாகும்.'' (அல்-ஹதீஸ்)

அல்குர்ஆனின் சட்டங்களும் கட்டளைகளும் தெளிவானவை, தீர்க்கமானவை. வாழ்வின் எல்லாத் துறைகளும் சார்ந்தவை. அது அறிவு பூர்வமான வழிகாட்டல்களைத் தருகின்றது. நம்பிக்கைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், நற்பண்புகள், கொடுக்கல் வாங்கல்கள், சமூக உறவுகள், நன்மை தீமைகள், குற்றங்கள், தண்டனைகள், யுத்த நெறிமுறைகள், சமாதான முயற்சிகள், சர்வதேசத் தொடர்புகள் போன்ற உலக வாழ்வின் எல்லா அம்சங்களையும் அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. எனவே தான் இஸ்லாம் அல்குர்ஆனை முதலாவது சட்ட மூலாதாரமாகக் கொண்டுள்ளது.

மனித வாழ்க்கைக்குத் தேவையான சகல போதனைகளையும், வழிகாட்டல்களையும், கலைகளையும் அது உள்ளடக்கி இருப்பதனால் அதனை முழுநிறைவான வேதமாகக் கொள்ளலாம்.

அல்குர்ஆன் 114 அத்தியாயங்களைக் கொண்டது. அல்குர்ஆனில் மிகப்பெரிய அத்தியாயமாக மதிக்கப்படும் ஸூரா பகரா 286 வசனங்களைக் கொண்டிருக்கிறது. அதேபோன்று மிகச் சிறிய அத்தியாயமாகக் கணிக்கப்படுகின்ற ஸூரா அல் கவ்ஸர் 03 வசனங்களை மட்டுமே கொண்டிருக்கிறது.

குர்ஆனை வுழுவுடன் கையாள்வதும், ஓதப்படக்கூடிய குர்ஆனைக் காது தாழ்த்திக் கேட்பதும், எழுத்துக்களை உச்சரிக்கும் முறை பேணி தஜ்வீத் முறைப்படி ஓதுவதும் முக்கியமாகும். மேலும் சில ஸூராக்களை வழமையாக ஓதி வர வேண்டும் என ஹதீஸ்கள் வந்துள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு

| | |
|---|---|
| ஸூரா - அஸ் - ஸஜதா | ஸூரா - - யாஸீன் |
| ஸூரா - அல் - முல்க் | ஸூரா - அல் - வாகிஆ |
| ஸூரா - அல் - பகரா (கடைசி வசனங்களை) | ஸூரா - அர் - ரஹ்மான் |

**சுருக்கமாக விடை தருக.**

1. இஸ்லாத்தின் சட்டமூலாதாரங்களில் முதன்மையானது எது?
2. அல்குர்ஆன் இன்றுவரை பாதுகாக்கப்பட்டுள்ள இரண்டு வழிமுறைகளைத் தருக?
3. அல்குர்ஆன் ஓர் சட்டமூலாதாரம் என ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஆதாரங்கள் இரண்டைத் தருக?
4. அல்குர்ஆனில் மிகப்பெரிய சூரா எது?
5. முக்கியத்துடன் ஓதவேண்டிய இரண்டு ஸூராக்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

## 6.2 சட்ட மூலாதாரம் அஸ்ஸுன்னா

அல-ஹதீஸ் என்ற சொல்லுக்கு செய்தி, நிகழ்ச்சி என்ற கருத்துக்கள் உண்டு. ஸுன்னா என்ற சொல்லுக்கு வழிமுறை, நடைமுறை என்ற கருத்தும் கொடுக்கப்படுகின்றது. ஸுன்னா எனப்படுவது நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வாழ்க்கை வழிமுறையைக் குறித்துக்காட்டுகின்ற ஒரு பதமாகும். இது இஸ்லாத்தின் பிரதான மூலாதாரமாகக் கொள்ளப்படுகின்றது. ஸுன்னா, ஹதீஸ் என்ற இரு பதங்களும் நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், குணநலன்கள் முதலியவற்றைக் குறிக்கின்றன.

அல்குர்ஆனை உரிய முறையில் விளங்கவும் நடைமுறைப்படுத்தவும் ஸுன்னா துணைசெய்கின்றது. அல்குர்ஆனைப் போலவே ஸுன்னாவையும் மூலாதாரமாகக் கொள்ள வேண்டும் என்பதை அல்குர்ஆன் எடுத்துக் காட்டுகின்றது.

*எவன் அல்லாஹ்வுடைய தூதருக்கு வழிபட்டு நடக்கிறானோ அவன் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு வழிபட்டவனாவான் (4:80)*

*நம்முடைய தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக்கொண்டாரோ அதில் இருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (3:32)*

*நபியே நீர் கூறும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் நீங்கள் வழிபடுங்கள். ஆனால் நீங்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரை நேசிப்பதில்லை. (3:32)*

இவ்வசனங்கள் நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி நடக்குமாறு பணிக்கின்றன. ஆதலால் ஸுன்னாவைப் புறக் கணிக்காது பின்பற்ற வேண்டும்.

> ''எனது சமூகத்தைச் சேர்ந்த எல்லோரும் சுவர்க்கம் நுழைவார்கள். நிராகரிப்போரைத் தவிர'' என நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபோது, நிராகரிப்போர் யாரென விளக்கம் கேட்கப்பட்டது. அப்போது ''எனக்கு வழிப்பட்டவன் சுவர்க்கம் நுழைவான். எனக்கு மாறுசெய்தவன் நிராகரித்துவிட்டான்'' என விளக்கம் அளித்தார்கள். (பைஹகி)

தன்னை அகிலங்களுக்கான போதனை என விளக்கிய அல்குர்ஆன் நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அகிலங்களுக்கான அருட்கொடை என விபரிக்கின்றது. தன்னை மனிதர்களுக்கான நேர்வழி என அறிமுகப்படுத்திய அல்குர்ஆன் நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எல்லா மனிதர்களுக்குமான தூதராக குறிப்பிடுகின்றது. ஆதலால், அல்குர்ஆனைப் போன்று சட்டமூலாதாரமாக அமைவதற்கான எல்லாத் தகைமைகளும் ஹதீஸ்களுக்கும் உண்டு.

நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வில் இருந்து வெளியான ஹதீஸை ஸஹாபாக்கள் செயற்படுத்தினார்கள். மனனம் செய்தார்கள். சிலர் எழுதியும் வைத்தார்கள். ஆனால், அல்குர்ஆனைப் போன்று முழுமையாகத் தொகுத்து எழுதிவைக்கவில்லை, எனினும், அடுத்துவரும் சந்ததியினர் சரியான முறையில் ஹதீஸ்களை அறிந்துகொள்ள வழியமைத்தார்கள்.

அடுத்த சந்ததியான தாபிஈன்களின் காலத்திலேயே ஹதீஸ்களைத் திரட்டி நூலுருவில் தொகுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இது தபஉத்தாபிஈன்கள் காலத்தில் உத்வேகம் அடைந்தது. போலி ஹதீஸ்களை இனங்காணல், ஹதீஸ்களைத் தரம் பிரித்தல், ஹதீஸ் நூல்களைத் தொகுத்தல், விரிவுரை நூல்களை எழுதுதல் போன்றவை இக்காலகட்டத்திலேயே ஆரம்பமானது. இதனால், ஆதாரபூர்வமான ஹதீஸ்களை உள்ளடக்கிய அஸ்ஸிஹா ஹுஸ்ஸித்தா என்ற ஆறு தொகுப்பு நூல்களுடன் இன்னும் பல ஹதீஸ் தொகுப்புகள் இன்றுவரை மூலாதார நூல்களாக இருந்து சட்டங்களை வகுக்கத் துணைபுரிகின்றன.

அல்குர்ஆன் அல்லாஹ்வுடைய வஹியாக இருப்பதைப் போன்று ஸுன்னாவும் அல்லாஹ்வுடைய வஹியாகும். இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

*அவர் தம் இஷ்டப்படி எதையும் கூறுவதில்லை. அவருக்கு வஹிமூலம் அறிவிக்கப்பட்டே அன்றி (அல்-குர்ஆன்)*

அல்லாஹ்வின் தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது (அல்-குர்ஆன்)

## செயற்பாடுகள்

**சுருக்கமான விடை தருக**

1. ஹதீஸ் என்ற சொல்லின் மொழிக் கருத்துக்களைக் குறிப்பிடுக.?
3. ஸுன்னாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக.?
4. ஸுன்னாவை ஏற்பதனால் கிடைக்கும் பயன்களைப் பட்டியற்படுத்துக.?
5. யாருடைய காலத்தில் ஹதீஸ் நூலுருவாக்கப்பட்டது.?

## 6.3 இஜ்திஹாத்

ஒரு மார்க்கப் பிரச்சனைக்கான தெளிவான சட்டம் காணப்படாதபோது அதுபற்றிய தீர்ப்பைப் பெறுவதற்காக ஒரு சட்ட அறிஞர் ஷரீஅத் சட்ட மூலாதாரங் களையும், சட்டவாக்க முறைகளையும் பின்பற்றித் தனது முழு முயற்சியையும் பயன் படுத்துவதையே இஜ்திஹாத் என அழைக்கப்படும்.

இம் முயற்சியின் போது அவர் எட்டும் முடிவு சரியானதாய் அமையுமிடத்து இரண்டு நன்மைகளும், அது தவறானதாக அமையும் பட்சத்தில் அவர் எடுத்துக் கொண்ட பிரயத்தனத்துக்காக ஒரு நன்மையும் வழங்கப்படுமென இஸ்லாம் கூறுகின்றது.

இஜ்திஹாத் ஏன் தேவைப்படுகின்றது என நோக்கும் போது அதற்காக பின்வரும் காரணங்களைக் குறித்துக் காட்டலாம்:

1. அல்குர்ஆன், ஸுன்னாவின் சட்டவசனங்களைக் கண்டறிதல், அவற்றின் மூலம் சட்டவிதிகளை வகுத்துக்கொள்ளல்.
2. பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்களில் பொருத்தமானதைத் தெரிவு செய்துகொள்ளல்.
3. அல்-குர்ஆன், ஸுன்னா தீர்ப்புக்கூறாத விடயங்களுக்கு முடிவு காணல்.

இஜ்திஹாத் என்ற விடயம் இஸ்லாமிய சட்டங்களின் உயிரோட்டத்தைப் பாதுகாப்பதற்கு மிகவும் அவசியமானதாகத் தோன்றுகிறது. சமூக மாற்றங்களுக்கேற்ப தோன்றக்கூடிய சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு எடுப்பதற்கான அனுமதியை இஜ்திஹாத் வழங்குகிறது. இதன் மூலம் இஜ்மா, கியாஸ் என்ற சட்ட விதிமுறைகள் வகுத்தெடுக்கப்படுகின்றன. இவ்விரண்டு சட்டவழிமுறைகளும் கால மாற்றங்களுக் கேற்ப இஸ்லாமிய சட்டங்கள் நெகிழ்ந்து கொடுக்ககூடிய தன்மையைப் பெற்றிருக்கின்றன என்பதற்குச் சான்றாகும்.

### இஜ்திஹாத் காண்பவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள்

இஜ்திஹாத் ஒரு மார்க்க நடவடிக்கை என்ற வகையில் அது தூய்மையாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதனை மேற்கொள்பவர்களுக்கு பல தகைமைகள் இருக்க வேண்டும்.

**தகைமைகள்**

1. முஸ்லிமாகவும் பருவமடைந்தவராகவும் புத்திக் கூர்மையுள்ளவராகவும் இருத்தல்.
2. இஜ்திஹாத் செய்யப்படுகின்ற குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை அறிந்திருத்தல்.
3. பொதுவாக குர்ஆன், ஹதீஸ் தொடர்பான கலைகள் பற்றியும், இல்முல் கியாஸ், உஸுலுல்பிக்ஹு போன்ற கலைகள் பற்றியும் நன்கு அறிந்திருத்தல்.
4. முன்னர் இடம்பெற்ற இஜ்மாஉ ஆன முடிவுகளை அறிந்திருத்தல்.
5. சட்டவாக்க முறைகள், ஆதாரம் பெறும் வழிமுறைகள் ஆகியவற்றை அறிந்திருத்தல்.
6. அரபு மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பதோடு இஜ்திஹாத் செய்யும் காலம், அக்கால மக்களின் வாழ்க்கைப் போக்கு முதலானவற்றையும் அறிந்திருத்தல்.
7. நீதி, பயபக்தி, பேணுதல், நன்நடத்தை முதலிய பண்புகளைக் கொண்டிருத்தல்.

சமகாலத்தில் பிரச்சினைகள் தோன்றும்போது பேணுதலும் தகைமையுமுடைய அறிஞர்கள் ஒன்றுகூடி முடிவெடுக்கும் அனுமதி ஷரீஅத்தில் உள்ளது. அதனடிப் படையில் தான் நவீன காலப் பிரச்சினைகளுக்கு அறிஞர்கள் ஒன்றுகூடித் தீர்வு காணுகின்றனர். இத்தீர்வு முறையே மிகப் பொருத்தமானதாகும். இவ்வாறு ஒன்றுகூடி தீர்வுகள் காண்பதன் மூலம் தனிப்பட்ட தீர்ப்புகளால் சமூகம் சிதறடிக்கப்படுவதிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கின்றது.

### செயற்பாடுகள்

சுருக்கமான விடை தருக.

1. இஜ்திஹாத் என்றால் என்ன?
2. இஜ்திஹாத் ஏன் தேவைப்படுகின்றது என்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?
3. இஜ்திஹாத் காண்பவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் யாவை?

# 6.4 இஜ்மாஉ கியாஸ்

## அல் இஜ்மாஉ

இஜ்திஹாத் மூலம் பெறப்படுகின்ற முதல் தர துணை மூலாதாரம் இஜ்மாஉ ஆகும். நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வபாத்துக்குப் பின்னர் ஸஹாபாக்கள் புதிய பிரச்சினைகள் தோன்றிய போது இஜ்மாஉ மூலமே தீர்வு கண்டார்கள். குறிப்பிட்ட பிரச்சினையில் எல்லா முஜ்தஹித்களும் ஏகோபித்து ஒரு முடிவுக்கு வருவது இஜ்மாஉ எனப்படும். சமகாலத்தில் வாழும் முஜ்தஹித்களில் ஒருவரேனும் ஏனைய முஜ்தஹித்களின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்தால் அது இஜ்மாவாக அங்கீகரிக்கப்படமாட்டாது.

இஜ்மாஉ எனும் அரபுப்பதம் அஜ்மஅ எனும் அரபுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். ஒன்று சேர்த்தல், உறுதி கொள்ளுதல், ஒத்த கருத்துக் கொள்ளுதல், ஏகோபித்த கருத்துக் கொள்ளல் எனும் மொழிக்கருத்துக்களில் இப்பதம் பிரயோகிக்கப்படுகின்றது. இஸ்லாமிய ஷரீஅத்தில் பின்வரும் கருத்திலேயே இது பிரயோகிக்கப்படுகின்றது.

குறிப்பிட்டதொரு பிரச்சினையில் முஜ்தஹித்கள் யாவரும் எவ்வித எதிர்ப்புமின்றி, கருத்து முரண்பாடின்றி ஏகோபித்த முடிவுக்கு வருவார்களாயின் அதனை ''இஜ்மாஉஸ்ஸரீஹ்'' (தெளிவான இஜ்மாஉ) என வழங்குவர். குறிப்பிட்ட பிரச்சினையில் பெரும்பாலானோர் ஒரு முடிவுக்கு வர சிலர் அத்தீர்ப்பு பற்றி அவருக்கு தெரிந்திருந்தும் எதுவும் கூறாமல் இருப்பின் அதனை ''இஜ்மா உஸ்ஸுகூத்தி'' (மௌன இஜ்மாஉ) எனக் கூறுவர். இந்த வகை இஜ்மாஉவை சிலர் சட்ட மூலாதாரமாகக் கொள்வதில்லை ஏனெனில் **''மௌனம் சம்மதத்தின் அறிகுறி''** எனக் கூறப்பட்டாலும் அச்சத்தின் காரணமாக மௌனமாக இருக்க முடியும் என்பது இவர்களின் வாதமாகும்.

இஜ்மாஉ சட்டமூலாதாரமாக அமைய முடியுமென்பதற்கும் ஆதாரங்கள் உண்டு.

''எவனொருவன் நேர்வழி இன்னது என்று தனக்குத் தெளிவான பின்னரும் (அல்லாஹ்வின்) இத்தூதரை விட்டுப்பிரிந்து மு.்மின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன் செல்லும் (தவறான) வழியிலேயே செல்ல விட்டு நரகத்திலும் அவனை நுழையச் செய்வோம். அதுவோ சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும்.'' (4:115)

''எனது சமூகம் தவறான விடயங்களில் ஒன்று படாது.'' (திர்மிதி) என்ற ஹதீஸ் இதற்கு நல்ல ஆதாரமாகும்.



இலவச விநியோகத்திற்காக

# அல் கியாஸ்

கியாஸ் என்பது இஸ்லாத்தின் அடுத்த துணை மூலாதாரமாகும். கியாஸ் என்ற சொல்லின் கருத்து ஒப்பு நோக்குதல், அனுமானித்தல் என்பனவாகும். இஸ்லாமிய வழக்கில் அல்குர்ஆன், ஸுன்னா, இஜ்மாஉ ஆகிய சட்ட மூலாதாரங்கள் மூலம் அல்லது அவற்றுள் ஒன்று மூலம் ஏற்கனவே பெறப்பட்ட ஒரு தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு புதிய பிரச்சினையை ஒப்பு நோக்கிக் கண்டறிகின்ற முடிவாகும். இந்த முடிவை (கியாஸை) சாதாரண மக்கள் காண முடியாது. முஜ்தஹித்தரத்திலுள்ளவர்களே காண முடியும்.

ஜும்ஆத் தினத்தில் தொழுகைக்காக அழைக்கப்படுகின்றபோது வியாபார நடவடிக்கைகளை விட்டுவிட்டு ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றச் செல்லுமாறு கட்டளை பிறப்பிக்கும் அல்குர்ஆனின் வசனம், வியாபாரமானது ஜும்ஆத் தொழுகையைத் தடைசெய்யும் என்பதன் காரணமாக அந்நேரத்தில் வியாபாரம் செய்வதை ஹராமாக்கியது. இதனால் ஜும்ஆத் தொழுகையைத் தடைசெய்யும் எந்தவொரு நடவடிக்கையும் ஹராமானது என்று ஒப்புநோக்கி முடிவெடுக்கப்பட்டுள்ளது. அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் கியாஸுக்கான பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஒரு பெண் நபியவர்களிடம் வந்து ஹஜ் கடமையை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ள நோய்வாய்ப்பட்டிருக்கும் தன் தந்தைக்காக தான் அதனை நிறைவேற்ற முடியுமா? என்று வினவியபோது தந்தை பட்ட கடனை விட அல்லாஹ்வுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடன் முக்கியமானதென ஒப்புநோக்கி விளக்கிக் காட்டினார்கள்.

முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை யமனுக்கு அனுப்பிய நபியவர்கள் அங்கு மக்கள் ஏதாவது பிரச்சினைகளை உம்மிடம் கொண்டுவந்தால் எவ்வாறு தீர்த்துவைப்பீர் என வினவிய போது அல்- குர்ஆனின் அடிப்படையில் என்று பதில் அளித்தார். அல்குர்ஆனில் தீர்வு கிட்டாதபோது யாது செய்வீர்? என்று வினவியபோது ஸுன்னாவின் அடிப்படையில் என்று பதில் அளித்தார். அதிலும் தீர்வு கிட்டாதபோது யாது செய்வீர் என வினவப்பட்டபோது, அல்குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் முரணாக அமையாதவாறு தனது சுய சிந்தனையைப் பயன்படுத்தி அவற்றைத் தீர்த்துவைப்பதாகக் குறித்துக் காட்டினார்கள். இஜ்திஹாத் வழிமுறையைக் கையாண்டு கியாஸ் முடிவுகளைப் பெறுவதற்கு இது அனுமதியாக அமைகிறது.

# கியாஸின் பகுதிகள் (ருகுன்கள்) 04

### 1. அல் - அஸ்ல் (முதற்பொருள்)

இது அல்-குர்ஆன், ஸுன்னா, இஜ்மா என்பனவற்றிலிருந்து நேரடியாகப் பெறப்படும் சட்டப்பிரிவாகக் காணப்படுகிறது. மேற்கூறப்பட்ட உதாரணத்தில் ஜும்ஆத் தொழுகைக்காக அழைக்கப்பட்ட பின்னர் வியாபாரம் செய்வதை அஸ்லாகக் குறிப்பிடலாம்.

## 2. அல் - ஹுக்ம் (தீர்ப்பு)

இது அல்-குர்ஆன், ஸுன்னா, இஜ்மா என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட சட்டப்பிரிவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்புக்குச் சொல்லப்படும். மேற்கூறப்பட்ட உதாரணத்தில் ஜும்ஆத் தொழுகைக்கு அழைக்கப்பட்ட பின் வியாபாரம் செய்தல் என்ற சட்டப்பிரிவுக்கு ஹறாம் என்று தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இத்தீர்ப்பு நடைமுறையில் இருக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும்.

## 3. அல்- இல்லத் (தீர்ப்புக்குரிய காரணி)

இது மூலப்பிர்சசினைக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்குக் காரணியாக அமையும் விடயத்தைக் குறிக்கிறது. மேற்கூறப்பட்ட உதாரணத்தில் வியாபாரத்திற்கு ஹறாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டதன் காரணியைக் கவனிப்போமானால் தொழுகைக்குத் தடையாக அமைதல் என்ற ஒரு விடயத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இக்காரணி அல்-குர்ஆன், ஸுன்னா, இஜ்மா ஆகிய ஒன்றிலிருந்து பெறப்பட்டதாகவோ அல்லது பகுத்தறிவுக்குப் பொருந்தக் கூடியதாகவோ இருக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும்

## 4. அல்-பர்உ (துணைப் பொருள்)

இது அல்-குர்ஆனிலோ ஸுன்னாவிலோ இஜ்மாவிலோ நேரடியாக எந்த தீர்ப்பும் வழங்கப்படாத புதுப் பிரச்சினையாகும். மேற்கூறப்பட்ட உதாரணத்தில் ஜும்ஆத் தொழுகைக்குச் செலல்வதைத் தடுக்கும் வியாபாரம் தவிர்ந்த ஏனைய விடயங்களை பரஉ என்று குறிப்பிடலாம்.

பயிற்சி :-

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. அல்-இஜ் மாஉ என்றால் என்ன?

2.அல்-கியாஸ் என்றால் என்ன?

3. இஸ்லாமிய நீதித்துறையில் அதன் முக்கியத்துவம் யாது?